# <u>சூரிய கூடார உலர்த்தி (Solar Drier)</u>

அறுவடை செய்த விவசாய விளைப் பொருட்களை உலர்த்துவதற்கு உதவும் சூரிய கூடார உலர்த்தி (Solar Drier) அமைக்க விவசாயிகளுக்கு, தமிழக அரசு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 50-60% மான்யம் வழங்குகிறது.

பொதுவாக மண் தரையிலோ அல்லது ரோட்டிலோ விவசாய விளை பொருட்களை காய வைத்தால், தரைப் பகுதியை ஒட்டியுள்ள பகுதியின் நிறம் மங்கியும், மேல் பகுதியிலுள்ள நிறம் வேறு மாதிரியாகவும் இருப்பதால், மொத்த பொருளின் தரம் குறைகிறது. மேலும், காய வைக்கும் பொருளுடன் அவ்விடத்திலுள்ள கல், மண் மற்றும் தேவையற்ற பிற பொருட்கள் கலந்து மேலும் தரம் இழக்கிறது.






சாலையில் விவசாய விளை பொருட்களை காய வைத்தால்

எனவே, விவசாயிகள் சூரிய கூடார உலர்த்தியின் மூலம் விளை பொருட்களை உலர்த்தினால், விளைபொருட்களின் தரம் கூடுவதோடு மட்டுமல்லாமல் சந்தையில் அதன் மதிப்பும் கூடுகிறது. இதில் காய வைப்பதன் மூலம் விளைபொருட்கள் இக்கூடாரத்தில் 64 டிகிரி செல்சியஸ் வரை உள்ள வெப்பக்கட்டுப்பாடு காரணமாக,

குறைந்த நேரத்தில் காய்ந்து விடுகிறது. மேலே கூடார அமைப்பு இருப்பதனால், காற்று மற்றும் மழை போன்ற இயற்கை அழிவுகளிலிருந்து பொருட்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் பாதுகாக்க உதவுகிறது. விளை பொருட்கள் தரமானதாக இருக்க பயன்படுகிறது.





சோலார் டிரையர்

சீரான தேவையான அளவில் உள்ள வெப்பத்தில் தூய்மையான இடத்தில் காய வைப்பதால் பொருளின் தரம் மேம்பட்டு இருப்பதுடன் குணமும், மணமும் மாறாமல் பிற இடங்களில் உலர்த்துவதை விட சூரிய கூடாரத்தில் உலர்த்தினால் பொருளின் தரம் பன்மடங்கு உயர்ந்ததாகவும் இருக்கும். 400 சதுர அடி பரப்பளவுள்ள கூடாரத்தில் சுமார் 1 டன் எடையுள்ள மிளகாய் பழத்தை காய வைத்துக் கொள்ளலாம். பறித்த மிளகாய் பழங்களை இக்கூடாரத்தில் வைத்தால், இரண்டு நாட்களில் முழுவதுமாக காய்ந்துவிடும். கீரை வகைகள், வாழைப்பழ மிட்டாய்கள், வத்தல்கள், வடாகங்கள், ஊறுகாய்கள் உலர்த்த பயன்படுத்தப்பட்டு வருகிறது. 400 சதுர அடி முதல் 1000 சதுர அடி பரப்பளவில் இக்கூடாரத்தை அமைத்துக் கொள்ளலாம். 400 சதுர அடி உள்ள சூரிய உலர்த்தி கூடாரத்தை அமைக்க சுமார் ரூ.3 லட்சம் செலவாகிறது.

1000 சதுர அடி பரப்பளவில் இக்கூடாரத்தை அமைக்க சுமார் ரூ.7 லட்சம் வரை செலவாகிறது. இதில் டிரே இல்லாமலும் அதிக செலவில்லாத பொருள்களை கொண்டு தரைத்தளத்தினை அமைத்து இக்கூடார அமைப்பின் செலவைக் குறைத்துக் கொள்ளலாம். சூரிய உலர்த்தி கூடாரத்தை அமைக்க செலவாகும் தொகையில் 60% தொகை சிறு, குறு, ஆதி திராவிடர், பெண் விவசாயிகளுக்கு அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு 50% தொகை அல்லது அதிகபட்சமாக ரூ.3 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.



மேற்கண்ட அரசு மானியத்துடன் சூரிய உலர்த்திக் கூடத்தை அமைப்பதற்கு அனைத்து விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள விவசாயிகள் கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள வேளாண் பொறியியல் துறை, செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகம் அல்லது கிருஷ்ணகிரி உதவி செயற் பொறியாளர் அலுவலகம்) ஆகியவற்றில் தங்களது குடும்ப அட்டை நகல், ஆதார் நகல், பட்டா நகல், அடங்கல் மற்றும் புலவரைபட நகல் ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது.